**தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),திருச்சி-23.**
**தேர்வு நெறியாளர் அலுவலகம்**

ந.க.எண்.2324/உ1/17, நாள் 12.12.2025

பொருள்: தேர்வுகள் - நவம்பர் 2025 பருவத் தேர்வு – தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி-23 - விடைத்தாள் மறுமதிப்பீடு (Re-Valuation) குறித்து.

-----------------

நவம்பர் 2025-ல் தன்னாட்சி பருவத்தேர்வு எழுதிய இளநிலை மற்றும் முதுநிலை (UG & PG) மாணவர்கள், நடப்புப் பருவத்தில் (current semester) தாங்கள் தேர்ச்சி பெறாத அல்லது தேர்ச்சி பெற்ற தாளுக்கு மறுமதிப்பீடு (Re-Valuation), மறுகூட்டல் (Re-totalling) மற்றும் விடைத்தாள் நகல் (Xerox copy) வேண்டுவோர், அதற்கான கட்டணத்தை **13.12.2025** முதல் தேர்வு நெறியாளர் அலுவலக இணையதளம்(**www.evrcoe.com**) வழியாக செலுத்தி உரிய விண்ணப்பத்தினை தேர்வு நெறியாளர் அலுவலகத்திலிருந்துப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

## முதுநிலை மாணவர்களுக்கு மறுமதிப்பீடு:

தேர்வு விடைத்தாள்களுக்கு மறுமதிப்பீடு கோரும் **முதுநிலை** (முதல்வருட மாணவர்கள் தவிர) மாணவர்கள் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் பாடத்தில் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்ணில் 50 விழுக்காட்டிற்கு கீழ் மதிப்பெண் பெற்றிருந்தால் தாள் ஒன்றுக்கு **ரூ.400/-** வீதம் இணையதளம் மூலமாக செலுத்தி உரிய விண்ணப்பம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். விடைத்தாளின் நகல் மாணவர் சார்ந்த துறைத்தலைவர் மற்றும் பாடஆசிரியரால் மறு மதிப்பீட்டிற்கு தகுந்தது என பரிந்துரை செய்த பின்னரே மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க முடியும், **(கொள்குறிவகை (objective type) வினாத்தாட்கள் உடைய தாளிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் விடைத்தாள் நகல் கோராமல் நேரடியாக மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்).** மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும் பாடத்தில் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்ணில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மதிப்பெண் பெற்றிருந்தால், மாணவர்கள் விடைத்தாள் நகல் பெற வேண்டிய அவசியமில்லை. அவர்கள் மறுமதிப்பீட்டிற்கு தாள் ஒன்றுக்கு **ரூ.600/-** வீதம் மேற்குறிப்பிட்டவாறு கட்டணப்பற்றுச்சீட்டு(Chalan) மூலம் செலுத்தி தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்று உரிய காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

## இளநிலை மாணவர்களுக்கு மறுமதிப்பீடு

தேர்வு விடைத்தாள்களுக்கு மறுமதிப்பீடு கோரும் **இளநிலை** மாணவர்கள் தாள் ஒன்றுக்கு **ரூ.500/-** வீதம் தேர்வு நெறியாளர் அலுவலக இணையதளம் (**www.evrcoe.com**) மூலம் கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மறுமதிப்பீடு கோரி விண்ணப்பிக்க கடைசி தேதி **20.12.2025** ஆகும்.
(அரசு விடுமுறை மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் தேர்வு நெறியாளர் அலுவலகம் இயங்கும்)

**கட்டண விவரம்**

| **வ. எண்** | **விவரம்** | **2025-2026 கல்வியாண்டிற்கு முன்னர் சேர்ந்த மாணவர்களுக்கு** | **2025-2026 கல்வியாண்டில் சேர்ந்த மாணவர்களுக்கு (I-UG & I-PG)** |
|---|---|---|---|
| 1. | மறுமதிப்பீடு (U.G. only) | ரூ.**500**/- தாள் ஒன்றுக்கு | ரூ.1000/- |
| 2. | மறு மதிப்பீடு (P.G. only) | ரூ.**1000**/-தாள் ஒன்றுக்கு (**400**(நகல்) + **600**(மறுமதிப்பீடு)) (P.G. only – if Below 50% of Passing Minimum Mark) | ரூ.1000/- |
| 3. | மறு மதிப்பீடு (P.G. only) | ரூ. **600**/- தாள் ஒன்றுக்கு(P.G. only – if above 50% of Passing Minimum Mark) | |
| 4. | மறுகூட்டல் (U.G. / P.G.) | 250/- | ரூ.300/- |
| 5. | விடைத்தாள் நகல்(U.G.& P.G) | 400/- | ரூ.1000/- |

12.12.25
**தேர்வு நெறியாளர்.**

12/12/25
**முதல்வர்.**

பெறுதல் :
தகவல் பலகை மற்றும் அனைத்து துறைத் தலைவர்கள்.